## சுருக்கம்

திட்டம் மற்றும் வளர்ச்சி – சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்ட அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை கூடம் அமைக்க ரூ.47.355 இலட்சத்திற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்–1) துறை**

அரசாணை (நிலை) எண்.273

நாள்:**12.06.2019**
விகாரி, வைகாசி – 29
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.5465/தி1 /5 /2017, நாள் 16.08.2017.

**********

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள், அரசாணை எண்.71, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11.3.2015ன் படி சேலம் மாவட்டம், வாழப்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை ரூ.90.00 இலட்சம் செலவில் 60 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும், மேற்காணும் தரம் உயர்த்தப்பட்ட வட்ட அரசு மருத்துவமனையில், கீழ்காணும் பிரிவுகள் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் சிகிச்சை பிரிவு | 15 படுக்கைகள் |
| 2 | பெண்கள் சிகிச்சை பிரிவு | 15 படுக்கைகள் |
| 3 | ஆண்கள் அறுவை சிகிக்சை பிரிவு | 5 படுக்கைகள் |
| 4 | பெண்கள் அறுவை சிகிச்சை பிரிவு | 5 படுக்கைகள் |
| 5 | மகப்பேறு முன் கவனிப்பு பிரிவு | 5 படுக்கைகள் |
| 6 | மகப்பேறு பின் கவனிப்பு பிரிவு | 5 படுக்கைகள் |
| 7 | மகப்பேறு பிரிவு | 5 படுக்கைகள் |
| 8 | குழந்தைகள் நலப்பிரிவு | 5 படுக்கைகள் |
| | மொத்தம் | 60 படுக்கைகள் |

மேலும், வாழப்பாடி பேரூராட்சி பகுதியில் சுமார் 60 கிராமங்கள் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர் என்றும், இப்பகுதியில் விபத்து ஏற்பட்டு காயமடைந்தவர்கள் இறக்கும் பட்சத்தில் அவர்களுடைய சடலத்தை பிணவறை இல்லாத காரணத்தினால் அருகிலுள்ள ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு இறந்தவர்களின் உடலை பாதுகாக்கவும் பிரேத பரிசோதனை செய்யவும் எடுத்து செல்வதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்ட அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை கூடம் அமைப்பதற்கு ரூ.49.61 இலட்சத்திற்கு நிர்வாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து தருமாறு அரசைக் கோரியுள்ளார். அதற்கான பொது பணித்துறையின் தோராய திட்ட மதிப்பீட்டினையும் அனுப்பியுள்ளார்.

3. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்ட அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை கூடம் அமைப்பதற்கு ரூ.47.355/- இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்ய முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"4210 மருத்துவம் பொது சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் (மருந்தாக்கியல் துறை உட்பட) – மாநிலச் செலவினம் – JA கட்டடங்கள் –416 பெரும்பணிகள் 01 பெரும்பணிகள்" ( த. தொ.கு.4210–01–110 JA–4160)

5. மேலே பத்தி 3.ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு " புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு, பொது – I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமை பொறியாளர் (கட்டடம்), சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020ஆம் நிதியாண்டிற்கான துணைமதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரியநேரத்தில் நிதித் (வரவு–செலவு, பொது – I / சுகாதாரம் II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி துறை அ.சா.கு.எண்.23779/சுகாதாரம்-I/2019, நாள்: 06.06.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 383 (முன்னூற்று எண்பத்து மூன்று) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது .

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை– 6.
வழியாக
இணைச் செயலாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சேலம்
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) சென்னை –5

மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநிலத்தலைமைக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18

நகல்:
நிதித் (சுகாதாரம் – II/வ.செ. பொ–II/பொ.ப.I) துறை, சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் துறை) சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை – 9
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13.6.19

பிரிவு அலுவலர்.

13/6/19